செய்திக் குறிப்பு dt: 3.3.18

புதுவை அரசு சமூகநலத்துறை காரைக்கால் சார்பாக திருநள்ளாறு தொகுதியைச் சார்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்திர நிதி உதவி 17 பேர்களுக்கு ரூபாய் 29,300/- தொகையையும் 36 நபருக்கு மாற்றுத் திறனாளி திருமண நிதியுதவி ரூபாய் 25,000/- ஆயிரமும் மூன்று சக்கர வாகனமும் ரூபாய் 56,000/- ஆயிரத்தில் 36 நபருக்கும் மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் திரு. R. கமலக்கண்ணன் அவர்கள் பெருந்தலைவர் காமராஜர் வளாகத்தில் வழங்கினார்கள்.

மேலும் ஆதிதிராவிட நலத்துறை சார்பால் ரூபாய் 15,000/- ஆயிரம் வீதம் 10 பேர்களுக்கு ஈமச்சடங்கு நிதிஉதவியையும் மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். மேலும் அப்போது பேசிய அமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் மூன்று சக்கர வாகனத்திற்கு 60 பேர்கள் மனு அளித்துள்ளார்கள். தற்போது தொகுதிக்கு 36 வண்டி வழங்கப்பட உள்ளது. மீதி இருப்பவர்களுக்கு விரைவில் வழங்கப்படும் என்று கூறினார்கள். உடன் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு. R. கேசவன். இ.ஆ.ப. உதவி இயக்குனர் திருமதி. சத்யா அவர்கள் மாற்றுத் திறனாளிகள் சங்கத் தலைவர் திரு. பேட்ச வைத்தியநாதன் மற்றும் [illegible] ஆகியோர் பங்கேற்றனர்.